பொங்கல் பண்டிகையையொட்டி

# டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சேவை தொடக்கம்

● மின் இணைப்பு பணிகள் நிறைவடைந்ததாக அதிகாரிகள் தகவல்

■ சென்னை

சென்னை அண்ணாசாலை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் பணியில் மின்இணைப்புப் பணிகள் நிறைவுபெற்று, நேற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிடையே, வரும் பொங்கல் பண்டிகை முதல் இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 35 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் சேவை உள்ளது. அதாவது, சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்கள், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், விமான நிலையம் போன்ற முக்கிய பகுதிகள் மெட்ரோ ரயில் சேவை இணைக்கப்பட்டுள்ளதால், பயணிகளின் எண்ணிக்கை 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

அடுத்தகட்டமாக அண்ணா சாலை - டிஎம்எஸ், சென்ட்ரல் வழியாக வண்ணாரப்பேட்டை வரை இந்த மாதத்தில் மெட்ரோ ரயில் சோதனை நடத்தி, டிசம்பர் இறுதியில் மக்களின் பயன்பாட்டுக்கு இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், பணிகளில் சற்று தொய்வு ஏற்பட்டதால், டிசம்பரில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## 9.5 கி.மீ. தூரம் சுரங்கப்பாதை

இதுதொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் அதிகாரிகளிடம் கேட்டபோது, "டிஎம்எஸ் பகுதியில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையில் 9.5 கி.மீ. தூரம் சுரங்கப்பாதை வழியாக மெட்ரோ ரயில் பணிகள் நிறைவடைந்துள்ளன. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மின் இணைப்புப் பணிகளும்நிறைவடைந்து, நேற்றுபல்வேறு கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கிடையே, அடுத்த மாதம் 2-வது வாரத்தில் இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில்களை இயக்கி சோதனை நடத்துவோம். அதன்பிறகு, ரயில்வே பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் பெற்று, பொங்கல் பண்டிகையின்போது, இந்தத் தடத்தில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும்" என்றனர்.